**செய்தி வெளியீடு எண் : 1403** **நாள் : 13.08.2022**

**செய்தி வெளியீடு**

# மயிலாடுதுறை மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, தமிழக அரசின் சார்பில் கொள்ளிடம் ஆற்றில் உபரி நீர் திறப்பால் பாதிக்கப்பட்ட 7 வருவாய் கிராமங்களை சேர்ந்த 813 குடும்பங்களுக்கு தலா ரூ. 4800/-வீதம் என மொத்தம் ரூ.40 லட்சம் நிவாரண உதவித்தொகையினை மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் இன்று(13.08.2022) வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழக அரசு சார்பில் கொள்ளிடம் ஆற்றில் உபரி நீர் திறப்பால் நிவாரண உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி கொள்ளிடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 5 வருவாய் கிராமங்களைச் சேர்ந்த 240 குடும்பங்களுக்கு தலா ரூ. 4800/- நிவாரண உதவித் தொகை, தலா 10 கிலோ அரிசி, தலா ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், தொடர்ந்து திருமைலாடி வருவாய் கிராமங்களைச் சேர்ந்த நாதல்படுகை பொது மக்களுக்கு 268 குடும்பங்களுக்கு தலா ரூ. 4800/- நிவாரண உதவித்தொகை, தலா 10 கிலோ அரிசி, தலா ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் அதன் தொடர்ச்சியாக முதலைமேடு வருவாய் கிராமங்களைச் சேர்ந்த முதலைமேடு திட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 305 குடும்பங்களுக்கு தலா ரூ. 4800/- வீதம் 813 குடும்பங்களுக்கு என மொத்தம் ரூ.40 லட்சம் நிவாரணத் தொகை உதவித்தொகை, தலா 10 கிலோ அரிசி, தலா ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்,வேட்டி,சேலை ஆகிய பொருட்களை மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் நிவாரண உதவிகள் வழங்கி பேசியாதாவது:

மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கொள்ளிடம் கரையோரங்களில் உள்ள 7 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட கிராமங்களில் மக்களுக்கு தேவையான உதவிகளை உடனடியாக செய்து கொடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அதன்படி நானும், மாவட்ட ஆட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஒன்றிணைந்து பொது மக்களை பாதுகாப்பான இடத்தில்

தங்க வைத்து அவர்களுக்கு தேவையான அத்தனை உதவிகளையும் இரவு, பகல் பாராமல் செய்து கொடுத்துள்ளோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களிடம் காலை, மாலையில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன உதவி செய்தீர்கள், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று கேட்டறிந்தார்கள். கண்ணும் கருத்துமாக பொதுமக்களை பாதுகாக்க வேண்டுமென எங்களுக்கு உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, கொள்ளிடம் கரையோர பாதிக்கப்பட்ட 7 வருவாய் கிராமங்களை சார்ந்த 813 குடும்பங்களுக்கு தலா ரூ. 4800 வீதம் ரூ. 40 லட்சம் நிவாரண உதவித்தொகையும், அவர்களுக்கு கூடுதலாக 10 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும், வேட்டி, சேலை வழங்க உத்தரவிட்டார்கள். அதன்படி, இன்று நாங்கள் வடரங்கம் வருவாய் கிராமத்தைச் சேர்ந்த மேலவாடியில் உள்ள 33 குடும்பங்களுக்கும், மாதிரி வேளூர் வருவாய் கிராமத்தைச் சேர்ந்த பாலூரான் படுகையில் உள்ள 35 குடும்பங்களுக்கும், சோதியக்குடி வருவாய் கிராமத்தைச் சேர்ந்த தொண்ணைக்காட்டு படுகையில் உள்ள 25 குடும்பங்களுக்கும், கோபாலசமுத்திரம் வருவாய் கிராமத்தைச் சேர்ந்த துளசேந்திரபுரத்தில் உள்ள 31 குடும்பங்களுக்கும், திருமைலாடி வருவாய் கிராமத்தை சேர்ந்த நாதல் படுகையில் உள்ள 268 குடும்பங்களுக்கும் அளக்குடி வருவாய் கிராமத்தைச் சேர்ந்த வெள்ளமணல் பகுதியில் உள்ள 116 குடும்பங்களுக்கும் முதலைமேடு வருவாய் கிராமத்தைச் சேர்ந்த முதலைமேடு திட்டில் உள்ள 305 குடும்பங்களுக்கும் தலா ரூ. 4800 வீதம் 813 குடும்பங்களுக்கு ரூ. 39,02,400 மதிப்பில் வெள்ள நிவாரண உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த நிவாரணத் தொகையில் வெள்ள நீரால் வீடுகளை இழந்தவர்களுக்கு ரூ.1800 உடமைகளுக்கும், ரூ. 2000 பண்டம் பாத்திரங்களுக்கும், ரூ.1000 தற்காலிக முகாமில் தங்கியதற்கான உதவித்தொகை என மொத்தம் தலா ரூ.4800 நிவாரண உதவித் தொகையும், அதனுடன் தலா 10 கிலோ அரிசியும் தலா ஒரு லிட்டர் மண்ணென்னையும், வேட்டி சேலையும் வழங்கப்படுகிறது. மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி நாதல் படுகையில் நிரந்தரமாக ரூ. 3 கோடியில் புயல் பாதுகாப்பு இல்லம் அமைக்க முதலமைச்சர் அவர்கள் அறிக்கை தயார் செய்ய உத்தரவிட்டுள்ளார். முதலைமேடு திட்டிலும் இதுபோன்ற புயல் பாதுகாப்பு இல்லம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

காட்டூர் காமராஜர் நகர் பகுதியை ஒட்டியுள்ள கொள்ளிட கரையை கற்களைக் கொண்டு கரையை பலப்படுத்தவும், சாலையை உயர்த்தவும், இந்த பணிகளை மேற்கொள்ளவும், ஆய்வு செய்யவும், ஐ.ஐ.டி. பேராசிரியர் சுரேஷ் என்பவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நியமித்திருக்கிறார்.

அளக்குடியில் கரையை ஒட்டி நிரந்தரமாக தீர்வு காண 800 மீட்டர் தொலைவிற்கு நிரந்தர தடுப்புச்சுவர் ரூ.47 கோடியில் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. காட்டூர்

கரையைப் பலப்படுத்த ரூ. 5 கோடியில் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள் அனைத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கப்படும். முதற்கட்டமாக நிவாரணத்தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

தொடர்ந்து வெள்ளத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு கணக்கெடுக்கும் பணியும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் கணக்கெடுக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. வெள்ள நீர் வடிந்த பிறகு ஏற்பட்ட சேதாரங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எப்போதும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மிகச் சிறந்த முதலமைச்சராக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார். இவ்வாறு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

வெள்ள பாதிப்புகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தடுக்கின்ற வகையில் ரூ 1.00 கோடி ரூபாய் நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து வழங்கி உள்ளார் அதற்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். பாதுகாப்பான பகுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு மொபைல் கழிவறை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட அனைத்து துறை சார்ந்த உயர் அதிகாரிகள் வெள்ள பாதிப்பு பணிகளை துரிதப்படுத்தி வருகின்றனர். வெள்ள பாதிப்புகள் கடுமையாக உள்ளதால் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. மழைநீர் வடிந்த பிறகு வெள்ளபாதிப்புகளால் பாதிக்கப்பட்ட விவாசாயிகளை உரிய கணக்கெடுப்பு பணிகளை வேளாண் துறை அதிகாரிகளோடு மேற்கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்று மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

புயல் வெள்ளம் ஏற்படுகின்றபோதெல்லாம் பாதிக்கப்படுகின்ற பகுதி கொள்ளிடம் ஒன்றிய பகுதி. கொள்ளிடம் ஒன்றிய பகுதியை பொறுத்தவரையில் வெள்ள பாதிப்பின் காரணமாக தொடர்ந்து ஒரு வார காலமாக வீட்டில் குடியிருக்க முடியாத அவலநிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழக அரசின் சார்பில் உபரிநீர் திறப்பால் பாதிக்கப்பட்ட 828 குடும்பங்களுக்கு தலா ரூபாய் 4800/- நிவாரண உதவித்தொகை (மொத்த ரூபாய். 40 இலட்சம்)மற்றும் 10 கிலோ அரிசி, 1 லிட்டர்

மண்ணெண்ணெய், வேட்டி, சேலைகள், போன்ற பொருட்களை இங்கேயே முகாமிட்டு மாண்புமிகு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார். தமிழக அரசின் சார்பில் எவ்வளவு உதவிகள் செய்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் இந்த ஆண்டிற்கான நாடாளுமன்ற தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ 1.00 கோடி ரூபாய் வழங்குகிறேன் என்று மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லலிதா.,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ்.நிஷா அவர்கள், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செ.ராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர், திரு.ருவேதா, எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.பன்னீர்செல்வம், சீர்காழி வருவாய் கோட்டாட்சியர், திருமதி.அர்ச்சனா, நீர்வளத் துறை செயற்பொறியாளர், திரு.சண்முகம், கொள்ளிடம் ஒன்றியக்குழு தலைவர் திரு.ஜெயபிரகாஷ், சீர்காழி வருவாய் வட்டாட்சியர், திரு.செந்தில்குமார், கொள்ளிடம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.ஜெரினா ராணி, திரு.சரவணன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதிகள், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நீர்வளத்துறை ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in